## தூத்துக்குடி – சாத்தான்குளம் சம்பவத்தில் நீதி எங்கே போனது?

# எடப்பாடியின் நாடகங்களை மக்கள் நம்பமாட்டார்கள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன அறிக்கை!



**சென்னை, ஜூலை4 –**

**“தூத்துக்குடி சாத்தான்குளம் சம்பவத்தில் நீதி எங்கே போனது? எடப்பாடியின் நாடகங்களை மக்கள் நம்பமாட்டார்கள்” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–

திருப்புவனம் கொடூரம் பற்றிய தகவல் வந்ததுமே, குற்றம் சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்; விரைந்து கைதும் செய்யப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் முதலமைச்சர் அவர்கள், தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதோடு, இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நியாயம் கிடைத்திட வழி வகை செய்யப்படும் என உறுதியளித்துள்ளார். வழக்கும் உடனடியாக சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, திருப்புவனம் இளைஞர் அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமாருக்கு அரசுப் பணி வழங்கியதோடு மட்டுமின்றி அவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இரண்டே நாட்களில் சட்ட ரீதியான இத்தனை நடவடிக்கைகள் எடுப்பதும் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் நிகழாதவை; இன்று அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

உங்கள் இருண்டகால ஆட்சியில் நடைபெற்ற, சாத்தான்குளம் சம்பவத்தில் ஜெயராஜ் பென்னீக்ஸ் இருவருமே உடல்நலக் குறைவால் இறந்தார்கள் என்றும், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை டிவியில் பார்த்துதான் தெரிந்துகொண்டேன் எனவும் ஆணவத்தோடும், அலட்சிய மனப்பான்மையோடும் பேசியவர் தானே நீங்கள்? அப்போது நீதி எங்கே போனது? கூவத்தூருக்கா? கொஞ்சமேனும் உங்களுக்கு மனசாட்சி இல்லையா?

உங்களின் கண்துடைப்பு நாடகங்களை யாரும் நம்பமாட்டார்கள்; இனியாவது நிறுத்திக் கொள்ளலாம்; நீதியை நிலைநாட்ட முதலமைச்சர் இருக்கிறார்!

இவ்வாறு கழக அமைபபுச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




“ஓரணியில் தமிழ்நாடு” திட்டம் குறித்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் ஆகியோர் தருமபுரி திமுக கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தனர்.

## தமிழ்நாட்டை ஒரு பரிசோதனை கூடமாக மட்டுமே பார்த்து வரும்

# பா.ஜ.க. அரசின் திட்டம் தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபடாது!

## தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி பேட்டி!

தருமபுரி, ஜூலை 4–

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் ஆகியோர் தருமபுரி திமுக கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி :–

தமிழ்நாடு முதலமைச்சர் வரலாற்று சிறப்புமிக்க ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார். கழக நிர்வாகிகள் இத்திட்டம் மூலம் தொடர்ந்து 45 நாட்களுக்கு நகரம் கிராமம் பூத் வாரியாக சென்று பொது மக்களை சந்தித்து அவர்களிடம் தமிழக அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணைத்து தமிழக மக்களின் மண் மானம் மொழி காக்கப்படவே இத்திட்டத்தை தமிழக முதல்வர் தொடங்கி இருக்கிறார்கள். ஓரணியில் தமிழ்நாடு திட்டம் திமுகவின் உறுப்பினர் சேர்க்கை மட்டுமல்ல. ஒன்றிய அரசு தமிழக அரசை வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. அதனை மக்களிடம் நேரடியாக சென்று எடுத்துக் கூறி அனைவரையும் ஒன்றிணைத்து ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் ஒன்றினைப்பதே திட்டத்தின் நோக்கம். தமிழகத்தில் சாதி மத பேதமின்றி அனைவரிடத்திலும் சென்று எடுத்துக் கூறி ஒன்றிணைப்பது மட்டுமே தலையாய கடமை. ஒன்றிய அரசு எப்பொழுதும் தமிழகத்தின் மீது வன்மத்தை மட்டுமே வீசி வருகிறது. பாஜக அரசு தமிழகத்தை ஒரு பரிசோதனை கூடமாக மட்டுமே பார்த்து வருகிறது. அவர்களுடைய திட்டம் தமிழகத்தில் ஒரு போதும் எடுபடாது. பாஜக தமிழகத்தில் துரோகிகளையும் போலிகளையும் வைத்து ஆட்சி நடத்த விடலாம் என நினைக்கிறது அதேபோல் தமிழகத்தை மீட்டு விடலாம் என நினைக்கிறது அது இங்கு அவருடைய திட்டம் பலிக்காது. தமிழக முதல்வர் இத்திட்டத்தை தமிழக மக்களின் நலனை மீட்க வேண்டும் என்பதற்காக அனைவரையும் ஓர் அணியில் சேர்த்து அவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே கொண்டுவந்துள்ளார்கள்.

அதேபோல் கீழடி அகழ்வாராய்ச்சி கல்வி நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்காமல் வருகின்றனர். மாநில அரசின் உரிமையை பறிப்பதற்காகவே பல்வேறு முயற்சிகள் ஒன்றிய அரசு செய்து வருகிறது. இதனால் மத்திய அரசின் முகத்திரையை கிழித்தெறிய வேண்டும் அதற்காக தான் திட்டங்கள் அனைத்தையும் மக்களிடம் எடுத்துரைத்து அனைவரையும் ஒன்றிணைப்பதே இத்திட்டத்தை தமிழக முதல்வர் கொண்டுவந்துள்ளார்கள். தமிழக மக்களை என்றென்றும் காப்பாற்றுவார் என்பதற்காக தான் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

**பி.பழனியப்பன் பேச்சு!**

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன் பேசுகையில்

இந்தி திணிப்பு, கல்வி நிதி நிறுத்திவைப்பு உள்ளிட்ட பல்வேறு வகையில் தமிழகத்தின் வளர்ச்சியை பாஜக தடுத்து வருகிறது. கீழடி அகழாய்வு அங்கீகாரம் அளிக்காதது. எப்படியாவது தமிழ்நாட்டில் காலூன்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு நாட்டினுடைய வளர்ச்சியை, அதிமுகவோடு கூட்டு சேர்ந்து கொண்டு பல்வேறு செயல்களில் பாஜக ஈடுபட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு ஓரணியில் போராட வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் முதல்வர் இன்றைக்கு சென்னையில் ஒரு பிரச்சாரமாக ஓரணியில் தமிழ்நாடு எனும் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறார். ஓரணியில் தமிழ்நாடு என்ற ஒரு உன்னதமான திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

மேற்கு மாவட்டத்தில் பொதுக் கூட்டங்கள் மூலம் மக்களை சந்திக்க இருக்கிறோம்.

தர்மபுரி கிழக்கு மேற்கு மாவட்டங்களில் சார்பில் அரூரில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது பி டி ஏ டிஜிட்டல் ஏஜென்ட் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று தமிழகத்தினுடைய சாதனைகளை பரப்புரையாக்க வேண்டும். செயலி மற்றும் உறுப்பினர் படிவத்தை வைத்து உறுப்பினர்கள் சேர்க்கவும் இந்தியாவிலேயே செயலின் மூலம் உறுப்பினர் சேர்ப்பது தமிழகத்தில் திமுக தான் முதன்முதலாக செய்கிறது. நாடாளுமன்ற தேர்தலில் பாஜக எப்படி ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை அதேபோன்று 2026 தேர்தலிலும் நடக்கும். 2026 திமுக ஆட்சி அமைக்கும் அதை தடுக்க எவராலும் முடியாது ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கும் பாஜக என பாசிசம் உள்ளடி வேலையும் பாமகவில் நடப்பது தந்தை மகனுக்கு இடையே நடக்கும் பிரச்சனையாகும். திமுகவிற்கும் பாமகவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என ராமதாஸ் அவர்களே தெரிவித்திருக்கிறார் என முன்னாள் அமைச்சர் பழனியப்பன் தெரிவித்தார். கூட்டத்தின் போது உடன் நகர செயலாளர் நாட்டான். மாது, மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி, ஒன்றிய செயலாளர் எம்வீடி. கோபால், ஐ.டி.விங் கௌதம் உள்ளிட்ட கழகத்தினர் உடன் இருந்தனர்.

# கரூர் மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்ப்பு!

## எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, சிவகாமசுந்தரி பங்கேற்பு!

கரூர், ஜூலை 4 -

ஓரணியில் தமிழ்நாடு, உறுப்பினர் சேர்க்கும் இயக்கம் கரூர் மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடி பகுதியிலும் வீடு வீடாக சென்று நடத்த கரூர் மாவட்ட கழகம் ஏற்பாடுகளை செய்துள்ளது.

கரூர் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் குளித்தலை எம்.எல்.ஏ. இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி எம்எல்ஏ ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ க. சிவகாமசுந்தரி ஆகியோர் முன்னிலையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட கழக செயலாளரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான, வி. செந்தில் பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓரணியில் தமிழ்நாடு, இயக்கம் கரூர் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றி வருகிறோம். உறுப்பினர் சேர்க்கை பரப்புரை மட்டுமல்லாமல் நம் மண், மொழி, மானம் காக்க மக்களை ஒன்று திரட்டுவது என்பது இதன் முக்கிய நோக்கம் என தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். நீட் தேர்வை திணித்து தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கல்வி கனவை ஒன்றிய அரசினர் சிதைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியையும் தராமல் ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. இந்தியை திணிக்கிறது. ஜிஎஸ்டி வரி தமிழ்நாடு தான் அதிக அளவில் கொடுத்து வருகிறது. இருந்தும் நமக்கு தர வேண்டிய நிதியை தராமல் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்.

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராய புரம், குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 1055 வாக்குச்சாவடிதோறும் உறுப்பினர் சேர்க்கை நடைபெற உள்ளது. இதற்காக பாக முகவர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினருக்கு முகாம் நடத்தி, உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இயக்கத்தை முன்னெடுக்கும் வகையில் கரூர் உழவர் சந்தை அருகே பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. 3 ம் தேதி காலை முதல் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை நடைபெற உள்ளது. கழகத் தலைவர் அவர்களின் ஆணையின் படி 30 சதவீதம் புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். நமது மாவட்ட கழக செயலாளர் அவர்கள் 40 சதவீதம் புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்கிற முனைப்பில் தீவிரமாக ஈடுபட்டு அனைவருக்கும் ஆலோசனை வழங்கி உள்ளார்கள்.

கடந்த நான்கு ஆண்டு கால கழக ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள், மாவட்ட கழக செயலாளர் அவர்களின் கோரிக்கையின்படி ரூ. 3000 கோடி அளவுக்கு திட்ட பணிகள் கரூர் மாவட்டத்திற்கு வழங்கியுள்ளார்கள். அரசு வேளாண்மை கல்லூரி, நெரூர் உண்ணியூர் காவிரி ஆற்று பாலம், கரூரில் புதிய பேருந்து நிலையம், ஜவுளி பூங்காக்கள், காமராஜ் புதிய மார்க்கெட், வெங்கமேடு மீன் மார்க்கெட் , குளித்தலையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.40 கோடி மதிப்பில் கட்டிடம் கட்டுமான பணிகள், அரவக்குறிச்சியில் முருங்கை பார்க் மற்றும் கலை அறிவியல் கல்லூரி, கிருஷ்ணராயபுரத்தில் சுமார் 200 ஏக்கர் மதிப்பீட்டில் சிட்கோ அமைக்கின்ற திட்டம், தரகம்பட்டியில் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இதுபோன்ற மக்கள் நல திட்டங்களையும் மாநில அளவிலே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் மகளிர் உரிமைத் தொகை, காலை உணவு திட்டம், விடியல் பயணம், தமிழ் புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம் போன்ற எண்ணற்ற திட்டங்களை விளக்கி அனைத்து நிர்வாகிகளும் அவரவர் வாக்களிக்கும் வாக்குச்சாவடிக்கு சென்று இப்பணியில் ஈடுபட வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி அவர்கள் அறிவுறுத்தலின்படி நிர்வாகிகள் அனைவரும் இணைந்து இப்பணியில் ஈடுபடுகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சுதாகர், கரூர் மாநகர பகுதி செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணியம், ஆர்எஸ். ராஜா, ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், ஒன்றிய பொறுப்பாளர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்டம் திருமருகலில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக்கூட்டம்!

## திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன் சிறப்புரை! உ.மதிவாணன் – இரா.சங்கர் – ஆர்.அருள்செல்வம் பங்கேற்பு!

நாகை, ஜூலை 4 -

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் திருமருகல் வடக்கு வீதி சந்தைபேட்டையில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமைத் தாங்கினார். திருமருகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ. செங்குட்டுவன் வரவேற்றார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் நாகை ஆர்.அருள்செல்வம், கீழ்வேளூர் இரா.சங்கர், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், திருமருகல் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பன்னீர்செல்வம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் திரைப்பட இயக்குநர் கரு பழனியப்பன், கழக இளம் பேச்சாளர் ம.மோகநிதி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, எஸ். பால்ராஜ், எஸ்.சந்தோஷ், இளம்.சுந்தர், பி.முருகானந்தம், ஆர். சுரேந்தர், மாவட்ட அயலக அணி அணி துணைத்தலைவர் ஆர்.விஜயகணபதி, திருமுருகல் வடக்கு ஒன்றிய நிர்வா கிகள் ஏ.ஜெயக்குமார், என்.குமரவேல், ஜெ.ஜெயபால், ஆர்.செந்தில்குமார், அஞ்சான்.நெடுமாறன், எம்.பி.மதியழகன், சுமதி மணிமாறன், ஏ.தமிமுல்அ ன்சாரி, திருமருகல் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மு.ஜெபகர்அலி, த. பாலையன், எம்.துரையரசன், கலா. கலியமூர்த்தி, த.சோமு, எம்.மகேந்திரன், ஜி.ரமேஷ்கண்ணா, திட்ச்சேரி பேரூர் கழக நிவாகிகள் கை.இராம லிங்கம், டி.பாலகுரு, கே.கல்யாணசுந்தரம், பி.வேம்பு, என்.விஸ்வலிங்கம், த.குணசேகரன், கு.ஹமீதுஜெகபர், மு.முகம்மதுரவி, மு.மைதிலிமுரு கேசன், பி.செல்வக்குமார், ஆர்.செந்தில், அ.முகம்மது அன்சாரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமது சுல்தான் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை அ.இராஜாராமன்

**ஜூலை 4 (2020)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கழக பொறியாளர் அணி சார்பில்

# “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் கழக உறுப்பினர்கள் சேர்க்கைத் திட்டம்!

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!


கழகத் தலைவர் ஆணைக்கு ஏற்ப தமிழ்நாட்டு மக்களை அநீதிகளுக்கு எதிராக ஒன்றிணைத்திட நம் மண் மொழி மானம் காத்திட "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற மாபெரும் கழக உறுப்பினர்கள் சேர்க்கைத்திட்டத்தில் பொறியாளர் அணியின் மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கழகத்தின் வழிகாட்டுதலின் படி தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.

நமது அணியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது பூத்துகளில் உறுப்பினர் சேர்க்கையின் பொழுது உடனிருந்து தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

BDA எனப்படும் Booth Digital Agent களுக்குத் தேவையான தொழில்நுட்பத் உதவிகளை நமது பொறியாளர் அணியினர் உடனிருந்து செய்துதரவேண்டும்.

மேற்கண்ட செயல்பாடுகளை மாவட்ட அமைப்பாளர்கள் கண்காணித்து தலைமை நிலையத்துக்கு வாராந்திர அறிக்கைகள் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர் –
தி.மு.க. பொறியாளர் அணி



கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ‘ஓரணியில் தமிழ்நாடு’ என புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை, கரூர் சட்டமன்றத் தொகுதி, கோடங்கிப்பட்டியில் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.